செய்தி வெளியீடு எண்:477 நாள்:13.10.2016

## செய்திவெளியீடு

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (13.10.2016) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை அமைச்சர் அலுவலகத்தில் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களால் விவசாயிகள் பயனடையும் வகையில் அறிவிக்கப்பட்ட சிறு, குறு விவசாயிகள் பெற்ற, விவசாய பயிர்க்கடன் தள்ளுபடி, கொப்பரை தேங்காய் கொள்முதல் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள், விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது: **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், விவசாய மேம்பாடு மற்றும் விவசாயிகள் நலன் கருதி சிறு, குறு விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்டு, 31.3.2016 அன்று நிலுவையில் இருந்த ரூ.5780.92 கோடியிலான பயிர்க் கடன், நடுத்தர கால வேளாண்மைக் கடன் மற்றும் நீண்டகால பண்ணை சார்ந்த கடன் ஆகிய அனைத்தும் தள்ளுபடி செய்து ஆணையிட்டதன் அடிப்படையில், அதற்கான அரசாணைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன. அரசு வழிகாட்டு நெறிமுறைகளுக்கிணங்க பயனாளிகள் பட்டியல்கள் செப்டம்பர் 1 ஆம் தேதி இணையதளத்தில் (www.tncu.tn.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. மேலும், கடன் தள்ளுபடி பெற்ற விவசாயிகளுக்கு உடனுக்குடன் பயிர்க்கடன்கள் வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களால் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, நடப்பாண்டில் ரூ.6,000 கோடி அளவிற்கு வட்டியில்லா பயிர்க் கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 30.9.2016 வரை 1,65,088 விவசாயிகளுக்கு ரூ.1,123.46 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 16,292 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.92.14 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, தென்னை விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் கொப்பரையினை அரசே நேரடியாக கொள்முதல் செய்யும் வகையில், கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக 20 மாவட்டங்களில் 46 கொள்முதல் மையங்கள் துவக்கப்பட்டு 7.10.2016 வரை 931 விவசாயிகளிடமிருந்து 1169.725 டன் கொப்பரை ரூ.6.96 கோடி அளவிற்கு கொள்முதல் செய்யப்பட்டு உடனுக்குடன் விவசாயிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து கூட்டுறவு வங்கிகளும், முழுமையாக தொழில்நுட்ப வசதிகளோடு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளுக்கு இணையாக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இந்த புதிய தொழில்நுட்ப வசதிகள் கூட்டுறவு வங்கிகளில் ஏற்படுத்தியதன் விளைவாக, இன்று 4,423 பொதுச் சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் மக்களுக்கு சாதிச் சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், பட்டா, சிட்டா வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகள்அளிக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் 2011 முதல் 31.8.2016 வரை ரூ.43.14 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் உன்னத திட்டமான பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திட்டத்தின்கீழ், 73 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 6.10.2016 வரை 19,231 மெ.டன் காய்கறிகள் ரூ.55.48 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து தரப்பு மக்களும் 15 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடையும் வகையிலான 106 அம்மா மருந்தகங்கள் மற்றும் 187 கூட்டுறவு மருந்தகங்கள் என மொத்தம் 293 மருந்தகங்கள் வாயிலாக இதுவரை ரூ.390.40 கோடி மதிப்பிலான தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, ஏழை எளிய மக்களின் பசிப்பிணி போக்கும் மகத்தான திட்டத்தின் கீழ் விலையில்லா அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், 1.86 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் அரும்பணியினை கூட்டுறவுத் துறை சார்ந்த 32,574 நியாயவிலைக் கடைகள் மேற்கொண்டு வருகின்றன. இந்த மாதம் தீபாவளி பண்டிகை வருவதையொட்டி, கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் பொதுவிநியோகத்திட்டம் மற்றும் சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் முறையாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் முழுமையாக சென்றடையும் வகையில் புகார்கள் ஏதுமின்றி பணியாற்றிட வேண்டும். கூட்டுறவுத்துறை அலுவலர்கள் இப்பணிகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்குவதை உறுதி செய்துக் கொள்ளுமாறும், தவறு செய்யும் பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப., கூட்டுறவு, கூடுதல் பதிவாளர்கள் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., முனைவர் க.இராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.எம்.மோகன், திரு.மு.செந்தமிழ்ச்செல்வன், திருமதி ஆர்.பிருந்தா, திரு.ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர் திரு.பா.பாலமுருகன் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*******

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**